# அக்டோபர் – 08 – பொதுக்கால 27ம் ஞாயிறு

### "படைகளின் கடவுளே! மீண்டும் வாரும்!"–
### தி.பா 80 : 14

## முதல் வாசகம் : ஏசாயா 5 : 1 – 7

என் நண்பரைக்குறித்துக் கவி பாடுவேன் என் அன்பரின் திராட்சைத் தோட்டத்தைப்பற்றிக் காதல் பாட்டொன்று பாடுவேன் செழுமை மிக்கதொரு குன்றின்மேல் என் நண்பருக்குத் திராட்சைத் தோட்டம் ஒன்றிருந்தது.அவர் அதை நன்றாகக், கொத்திக்கிளறிக் கற்களைக் களைத்தெடுத்தார் நல்ல இனத் திராட்சைச் செடிகளை அதில் நட்டுவைத்தார் அவற்றைக் காக்கும் பொருட்டுக் கோபுரம் ஒன்றைக் கட்டி வைத்தார் திராட்சைப் பழம் பிழிய ஆலை ஒன்றை அமைத்தார் நல்ல திராட்சைக் குலைகள் கிட்டுமென எதிர்பார்த்து காத்திருந்தார் மாறாக, காட்டு பழங்களையே அது தந்தது.இப்பொழுது என் நண்பர் சொல்கிறார் எருசலேமில் குடியிருப்போரே, யூதாவில் வாழும் மனிதரே, எனக்கும் என் திராட்சைத் தோட்டத்திற்கும் இடையே நீதி வழங்குங்கள்.என் திராட்சைத் தோட்டத்திற்குச் செய்யாது நான் விட்டு விட்டதும் இனிச் செய்யக் கூடியதும் ஏதும் உண்டோ? நற்கனிகளைத் தரும் என்று நான் காத்திருக்க, காட்டுப் பழங்களை அது தந்ததென்ன?என் திராட்சைத் தோட்டத்திற்குச் செய்யப் போவதை உங்களுக்கு நான் அறிவிக்கிறேன், கேளுங்கள் "நானே அதன் வேலியைப் பிடுங்கி எறிவேன் அது தீக்கிரையாகும் அதன் சுற்றுச் சுவரைத் தகர்த்தெறிவேன் அது மிதியுண்டு போகும்.நான் அதைப் பாழாக்கி விடுவேன் அதன் கிளைகள் நறுக்கப்படுவதில்லை களையை அகற்ற மண் கொத்தப்படுவதுமில்லை நெருஞ்சியும், முட்புதர்களுமே அதில் முளைக்கும் அதன்மீது மழை பொழியாதிருக்க மேகங் களுக்குக் கட்டளையிடுவேன்."டைகளின் ஆண்டவரது திராட்சைத் தோட்டம் இஸ்ரயேல் குடும்பத்தாரே அவர் ஆர்வத்துடன் நட்ட கன்று யூதா மக்களே நீதி விளையுமென்று எதிர்நோக்கியிருந்தார் ஆனால் விளைந்ததோ இரத்தப்பழி நேர்மை தழைக்கும் என்று காத்திருந்தார் ஆனால் தழைத்ததோ முறைப்பாடு.

**பதில்பாடல் :** ஆண்டவரது திராட்சைத் தோட்டம் இஸ்ராயேல் குடும்பத்தாரே

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 4 : 6 - 9

சகோதர சகோதரிகளே! எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறைவேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள்.அப்பொழுது, அறிவெல்லாம் கடந்த இறை அமைதி கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள உங்கள் உள்ளத்தையும் மனத்தையும் பாதுகாக்கும்.இறுதியாக, சகோதர சகோதரிகளே, உண்மையானவை எவையோ, கண்ணியமானவை எவையோ, நேர்மையானவை எவையோ, தூய்மையானவை எவையோ, விரும்பத்தக்கவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, நற்பண்புடையவை எவையோ, போற்றுதற்குரியவை எவையோ, அவற்றையே மனத்தில் இருத்துங்கள்.நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்டவை, என் வழியாய்ப் பெற்றுக்கொண்டவை, என்னிடம் கேட்டறிந்தவை, என் வாழ்வில் நீங்கள் கண்டுணர்ந்தவை யாவற்றையும் கடைப்பிடியுங்கள். அப்போது அமைதியை அருளும் கடவுள் உங்களோடிருப்பார்.

## நற்செய்தி : மத்தேயு 21 : 33 - 43

அக்காலத்தில் இயேசு தலைமைக் குருக்களையும் மூப்பர்களையும் நோக்கிக் கூறியதாவது: "மேலும் ஓர் உவமையைக் கேளுங்கள் நிலக்கிழார் ஒருவர் ஒரு திராட்சைத் தோட்டம் போட்டு சுற்றிலும் வேலி அடைத்து அதில் பிழிவுக்குழி வெட்டி ஒரு காவல் மாடமும் கட்டினார் பின்பு தோட்டத் தொழிலாளர்களிடம் அதைக் குத்தகைக்கு விட்டுவிட்டு நெடும் பயணம் மேற்கொண்டார். பழம் பறிக்கும் காலம் நெருங்கி வந்த போது அவர் தமக்குச் சேர வேண்டிய பழங்களைப் பெற்று வரும்படி தம் பணியாளர்களை அத்தோட்டத் தொழிலாளர்களிடம் அனுப்பினார். தோட்டத் தொழிலாளர்களோ அவருடைய பணியாளர்களைப் பிடித்து ஒருவரை நையப் புடைத்தார்கள் ஒருவரைக் கொலை செய்தார்கள் ஒருவரைக் கல்லால் எறிந்தார்கள். மீண்டும் அவர் முதலில் அனுப்பியவர்களைவிட மிகுதியான வேறு சில பணியாளர்களை அனுப்பினார். அவர்களுக்கும் அப்படியே அவர்கள் செய்தார்கள். தம் மகனை மதிப்பார்கள் என்று அவர் நினைத்துக் கொண்டு அவரை இறுதியாக அவர்களிடம் அனுப்பினார். அம்மகனைக் கண்ட போது தோட்டத் தொழிலாளர்கள் "இவன்தான் சொத்துக்கு உரியவன் வாருங்கள்இ நாம் இவனைக் கொன்று போடுவோம் அப்போது இவன் சொத்து நமக்குக் கிடைக்கும்" என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள். பின்பு அவர்கள் அவரைப் பிடித்து திராட்சைத் தோட்டத்திற்கு வெளியே தள்ளிக்கொன்று போட்டார்கள். எனவே திராட்சைத் தோட்ட உரிமையாளர் வரும ் போது அத்தொழிலாளர்களை என்ன செய்வார்?" என இயேசு கேட்டார். அவர்கள் அவரிடம் "அத்தீயோரை ஈவிரக்கமின்றி ஒழித்து விடுவார் உரிய காலத்தில் தமக்கு சேரவேண்டிய பங்கைக் கொடுக்க முன்வரும் வேறுதோட்டத் தொழிலாளர்களுக்கு அத்திராட்சைத் தோடடத்தைக் குத்தகைக்கு விடுவார்" என்றார்கள். இயேசு அவர்களிடம் "கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத் ்துக்கு மூலைக்கல் ஆயிற்று. ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று!" என்று நீங்கள் மறைநூலில் ஒருபோதும் வாசித்தது இல்லையா? எனவே உங்களிடமிருந்து இறையாட்சி அகற்றப்படும் அவ்வாட்சிக்கு ஏற்ற முறையில் செயல்படும் ஒரு மக்களினத்தார் அதற்கு உட்படுவர் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

**தியானம்:** ஆதிமுதல் பற்பல இறைவாக்கினர்கள் வழியாக விண்ணரசின் மகிமையையில் பங்கு பெறும் பேற்றை எமக்களித்த எல்லாம் வல்ல இறைவன், இறுதியில் தமது ஒரே மகனையே அனுப்பி இவ்வுலகை மீட்டெடுக்கும் மூலைக்கல்லாக உயர்த்தினார். இன்றைய நற்செய்தி இவ்வுண்மையைத் தெளிவுபடுத்தி, எவ்வேளையிலும் நாம் ஆண்டவரது ஏவுதலுக்கு உகந்தவர்களாக அவரோடு இணைந்திருக்க எம்மை அழைக்கின்றது. இவ்வுலகில் மனிதர்களாலே புறக்கணிக்கப் பட்டாலும், இறை ஏவுதலுக்கு அமைந்ததால் விண்ணரசின் மகிமைக்கு உயர்த்தப்பட்ட பலரை விவிலிய வரலாறு தெரிவிக்கின்றது. ஆதியிலே மோசே பாரவோனால் புறக்கணிக்கப்பட சீனாய் மலையில் உயர்த்தப்பட்டார். யோசேப்பு சகோதர்களாலே புறக்கணிக்கப்பட எகிப்தின் அரசனாக உயர்த்தப்பட்டார். புதிய ஏற்பாட்டிலோ அன்னை மரியா போன்றோர் சமுதாயத்தில் அடிமட்ட நிலையில் வாழ்ந்தாலும், இறைசித்தத்தை தாழ்ச்சியோடு ஏற்றதால் பேறுபெற்றவர்களாக உயர்த்தப்பட்டார்கள். இவ்வாறான புனிதர்களது வரலாற்றின் வெளிச்சத்தில், இன்றைய நற்செய்தியை நோக்குமிடத்து இறையாட்சி பரப்பும் பணியில் நாமும் இணைந்து செயற்பட அழைக்கப்பட்டுள்ளோம். ஆண்டவர் இயேசு தமது போதனையாலும், பணிவாழ்வாலும் கொண்டுவந்த புதுவாழ்வின் மதிப்பீடுகளை மனிதர்களான நாம் தடைபோட்டு, அடைத்து வைக்க முடியாது. இவ்வழைப்பை எமது வாழ்க்கை முறையால் கொச்சைப்படுத்தி வாழுவோமாயின் "உங்களிடமிருந்து இறையாட்சி அகற்றப்படும்." (மத்தேயு 22:43) என இன்றைய நற்செய்தி எம்மை எச்சரிக்கின்றது. எனவே, எமது மத்தியில் நற்செய்தியைப் பரப்பிட நீயுமா? என எம்மை எவரும் கொச்சைப்படுத்தி ஒதுக்கலாம். மனிதர்களால் எமது வெளித்தோற்றத்தை மாத்திரமே பார்க்க முடியும். ஆனால் கடவுளோ மனித உள்ளத்தை ஆராய்ந்தறிபவர். ஆதலால், பாவியான வீதியோரத்துப்பெண் வெரோணிக்காவும், சிலுவை சுமந்த சீமோன்போன்றவர்கள், விண்ணரசின் நற்செய்தியைப் பரப்பிட முடியுமாயின் எம்மால் ஏன் முடியாது?. சிந்திப்போம். ஏனெனில் புறக்கணிக்கப்பட்ட கல்லே மூலைக்கல்லாயிற்று என்று வேதம் சொல்கின்றது.